ஈரோடு தெற்கு மாவட்டம் – மாநகர – ஒன்றியங்களில்

# விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு - பொதுமக்களுக்கு நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு. முத்துசாமி அறிக்கை!



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை (27.11.2024 புதன்கிழமை) முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர பகுதிகள், ஒன்றியங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் மற்றும் மாவட்ட, மாநகர கழக துணை அமைப்புகளின் சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியும் கீழ்க்கண்ட அட்டவணைப் படி நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட கழக நிர்வாகிகள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட மாநகரப் பகுதிகள் மற்றும் ஒன்றியங்கள் சார்பில் நடைபெறும் விளையாட்டுபோட்டிகள்.

| வ.எண் | தேதி | பகுதி/ஒன்றியம் | விளையாட்டு |
|---|---|---|---|
| 1. | 17.11.2024 -ஞாயிறு | ஊத்துக்குளி மத்திய ஒன்றியம் | கிரிக்கெட் |
| 2. | 18.11.2024-திங்கள் | கருங்கல்பாளையம் பகுதி | சிலம்பம்&அடிமுறை |
| 3. | 23.11.2024-சனி | வீரப்பன்சத்திரம் பகுதி | கபாடி |
| 4. | 23.11.2024-சனி | கோட்டைப் பகுதி | சதுரங்கம் |
| 5. | 24.11.2024-ஞாயிறு | பெரியசேமூர் பகுதி | கைப்பந்து |
| 6. | 24.11.2024-ஞாயிறு | சூரியம்பாளையம் பகுதி | இறகு பந்து |
| 7. | 24.11.2024-ஞாயிறு | பெரியார் நகர் பகுதி | சதுரங்கம் |
| 8. | 24.11.2024-ஞாயிறு | கொல்லம்பாளையம் பகுதி | இறகு பந்து |
| 9. | 24.11.2024-ஞாயிறு | மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் | கைப்பந்து |
| 10. | 24.11.2024-ஞாயிறு | சென்னிமலை வடக்கு ஒன்றியம் | கோ. கோ |
| 11. | 24.11.2024-ஞாயிறு | பெருந்துறை கிழக்கு ஒன்றியம் | கிரிக்கெட் |
| 12. | 24.11.2024-ஞாயிறு | ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம் | கிரிக்கெட் |
| 13. | 27.11.2024-புதன் | கொடுமுடி மேற்கு ஒன்றியம் | கைப்பந்து |
| 14. | 27.11.2024-புதன் | சூரம்பட்டி பகுதி கிரிக்கெட், | தடகளம் |
| 15. | 27.11.2024-புதன் | பெருந்துறை தெற்கு ஒன்றியம் | சிலம்பாட்டம் |
| 16. | 27.11.2024-புதன் | பெருந்துறை வடக்கு ஒன்றியம் | தடகளம் |
| 17. | 01.12.2024-ஞாயிறு | மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் | கால்பந்து |
| 18. | 01.12.2024-ஞாயிறு | ஊத்துக்குளி வடக்கு ஒன்றியம் | கிரிக்கெட் |
| 19. | 01.12.2024-ஞாயிறு | கொடுமுடி வடக்கு ஒன்றியம் கபாடி | |
| 20. | 01.12.2024-ஞாயிறு | ஈரோடு ஒன்றியம் | ஹாக்கி |
| 21. | 08.12.2024-ஞாயிறு | மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் | கபாடி |

**தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர கழக துணை அமைப்புகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா**

| வ.எண் | தேதி | அணிகளின் விவரம் | நலத்திட்ட உதவிகள் வழங்கும் இடம் |
|---|---|---|---|
| 1. | 17.11.2024- ஞாயிறு | மாவட்ட இளைஞர் அணி | அட்சயம் அறக்கட்டளை, சோலார் புதிய பேருந்து நிலையம் |
| 2. | 18.11.2024- திங்கள் | மாநகர இளைஞர் அணி | மனவளர்ச்சி குன்றியவர்கள் தொழில் பயிற்சி மையம், பெரிய செங்கோடம்பாளையம் |
| 3. | 19.11.2024-செவ்வாய் | மாவட்ட மகளிர் அணி | வெங்கடேஸ்வரா குழந்தைகள் காப்பகம்,திண்டல் |
| 4. | 20.11.2024- புதன் | மாநகர மகளிர் அணி | இளையபாரதம் குழந்தைகள் காப்பகம், சூரம்பட்டி |
| 5. | 21.11.2024-வியாழன் | மாவட்ட மகளிர் தொண்டரணி<br>மாநகர மகளிர் தொண்டரணி | உதவும் உள்ளங்கள், வெண்டிபாளையம் |
| 6. | 22.11.2024-வெள்ளி | மாவட்ட சிறுபான்மையினர் அணி<br>மாநகர சிறுபான்மையினர் அணி | காதுகேளாதோர் பள்ளி, சூரியம்பாளையம் |
| 7. | 23.11.2024-சனி | மாவட்ட நெசவாளர் அணி<br>மாநகர நெசவாளர் அணி | மரியாலயா காப்பகம், கஸ்பாபேட்டை |
| 8. | 24.11.2024-ஞாயிறு | மாவட்ட பொறியாளர் அணி<br>மாநகர பொறியாளர் அணி | மாற்றுத்திறனாளிகள் குழந்தைகள் காப்பகம், குருசாமி கவுண்டர் திருமண மண்டபம் அருகில் |
| 9. | 25.11.2024-திங்கள் | மாவட்ட விவசாய அணி<br>மாநகர விவசாய அணி | இளையபாரதம் குழந்தைகள் காப்பகம், சூரம்பட்டி |
| 10. | 26.11.2024-செவ்வாய் | மாவட்ட மாணவர் அணி<br>மாநகர மாணவர் அணி | மனவளர்ச்சி குன்றியவர்கள் தொழில் பயிற்சி மையம், பெரிய செங்கோடம்பாளையம் |
| 11. | 27.11.2024-புதன் | மாவட்ட இலக்கிய அணி<br>மாநகர இலக்கிய அணி | கருணை இல்லம், கே.கே.நகர் |
| 12. | 28.11.2024-வியாழன் | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி<br>மாநகர விவசாய தொழிலாளர் அணி | மரியநிவாஸ் காப்பகம், முத்துக்கவுண்டன்பாளையம் |
| 13. | 29.11.2024-வெள்ளி | மாவட்ட தொண்டரணி<br>மாநகர தொண்டரணி | கருணாலயா ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்,எல்லைநகர், கஸ்பாபேட்டை |
| 14. | 30.11.2024-சனி | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி<br>மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி | அட்சயம் அறக்கட்டளை, சோலார் புதிய பேருந்து நிலையம் |
| 15. | 01.12.2024-ஞாயிறு | மாவட்ட தொழிலாளர் அணி<br>மாநகர தொழிலாளர் அணி | வெங்கடேஸ்வரா குழந்தைகள் காப்பகம், திண்டல் |
| 16. | 02.12.2024-திங்கள் | மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி<br>மாநகர அமைப்புசாரா ஓட்டுனர் அணி | உதவும்உள்ளங்கள்,வெண்டிபாளையம் |
| 17. | 03.12.2024-செவ்வாய் | மாவட்ட வழக்கறிஞர் அணி<br>மாநகர வழக்கறிஞர் அணி | காதுகேளாதோர்பள்ளி,சூரியம்பாளையம் |
| 18. | 04.12.2024-புதன் | மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி தகவல் தொழில்நுட்ப | மரியநிவாஸ் காப்பகம், அணி முத்துக்கவுண்டன்பாளையம் |
| 19. | 05.12.2024-வியாழன் | மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி<br>மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு அணி | கருணை இல்லம், கே.கே.நகர் |
| 20. | 06.12.2024-வெள்ளி | மாவட்ட மீனவர் அணி<br>மாநகர மீனவர் அணி | இளையபாரதம் குழந்தைகள் காப்பகம், சூரம்பட்டி |
| 21. | 07.12.2024-சனி | மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை | மனவளர்ச்சி குன்றியவர்கள் தொழில் பயிற்சி மையம்,பெரிய செங்கோடம்பாளையம் |
| 22. | 08.12.2024-ஞாயிறு | மாவட்ட வர்த்தகர் அணி<br>மாநகர வர்த்தகர் அணி | மரியாலயா காப்பகம், கஸ்பாபேட்டை |
| 23. | 09.12.2024-திங்கள் | மாவட்ட சுற்றுசூழல் அணி<br>மாநகர சுற்றுசூழல் அணி | கருணாலயா ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்,எல்லைநகர், கஸ்பாபேட்டை |
| 24. | 10.12.2024-செவ்வாய் | மாவட்ட அயலக அணி | வெங்கடேஸ்வரா குழந்தைகள் காப்பகம், திண்டல் |
| 25. | 11.12.2024-புதன் | மாவட்ட மருத்துவர் அணி | மாற்றுத்திறனாளிகள் குழந்தைகள் காப்பகம், குருசாமிகவுண்டர்திருமணமண்டபம்அருகில் |
| 26. | 12.12.2024-வியாழன் | தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | உதவும்உள்ளங்கள்,வெண்டிபாளையம் |

**அமைச்சர் சு. முத்துசாமி,**
செயலாளர்
ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.

# ‘இந்தியா’ கூட்டணியை வலிமைப்படுத்துவோம்!

## ‘வசந்த்’ தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் ஆ.கோபண்ணா வலியுறுத்தல்!

**(‘வசந்த்’ தொலைக்காட்சியில் 12.11.2024 அன்று அளித்த நேர்காணலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் ஆ. கோபண்ணா கூறிய கருத்துகள் வருமாறு :)**

இந்திய அரசமைப்புச் சட்டப்படி அனைத்து மதங்களுக்கும் சம உரிமை உள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலேயே ‘மதச்சார்பின்மை’ இருக்கிறது. அந்த மதச்சார்பின்மைக் கொள்கைக்கு விரோதமாக, மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்தும் பா.ஜ.க.வின் மதச்சார்பு அரசியலுக்கு எதிராக, இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியாக, தலைவர் ராகுல்காந்தி அவர்கள் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும், மணிப்பூர் முதல் மும்பை வரையிலும் 10 ஆயிரம் கிலோ மீட்டர் பாரத ஒற்றுமை நடைப்பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தில் மக்களை நேரடியாகச் சந்தித்து, உரையாடி தேச ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

‘இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கும் மேல் செல்லக் கூடாது’ என உச்ச நீதிமன்றம் வரம்பு நிர்ணயித்துள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. இட ஒதுக்கீடு தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அதைக் களைய சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அவர்களின் மக்கள்தொகைக்கேற்ப விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தி வருகிறார். அதற்காகவே மக்கள்தொகை கணக்கெடுப்போடு, சாதிவாரிக் கணக்கெடுப்பும் நடத்தவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்து வருகிறார்.

பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு ஒன்றிய அரசுப் பணிகள், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய நாட்டை; விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் ஆட்சி நடத்த முடியாது. ஒன்றிய அரசுத் துறைகளின் செயலாளர்கள், இணை, துணைச் செயலாளர்கள் போன்ற உயர்நிலைப் பதவிகளில் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லை.

இதைத்தான் ராகுல் காந்தி ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார்.

இதற்கு கடந்த மக்களவைத் தேர்தலில் பெரும் வரவேற்பு கிடைத்தது. அதனால்தான் பா.ஜ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. பா.ஜ.க.வின் மதவாத வெறுப்பு அரசியலால் சிறுபான்மைச் சமூகத்தினர் பாதிக்கப்படுகிறார்கள். இதனால், சமூகப் படிநிலையில் உயர்நிலையில் உள்ள ஆதிக்கச் சமூகத்தினர்தான் பலன் பெறுகிறார்கள். பா.ஜ.க.வின் மதவாத அரசியலால் 70 சதவிகிதத்திற்கும்மேல் உள்ள பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பலன் கிடைக்கவில்லை.

இதைத்தான் ராகுல் காந்தி மக்களுக்குத் தெளிவுபடுத்தி வருகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆதிக்கச் சமுதாய மனப்பான்மை கொண்ட ஆர்.எஸ்.எஸ். என்ன முடிவெடுக்கச் சொல்கிறதோ அதைத்தான் செய்ய முடியும். ஆர்.எஸ்.எஸ்.சால் இயக்கப்படுபவர் பிரதமர் மோடி. அவர்களால் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

அதனால்தான் ராகுல் காந்தி சமூக நீதி அரசியலை பேசி வருகிறார்.

‘கோத்ரா’ ரயில் எரிப்புச் சம்பவத்துக்குப் பிறகு குஜராத் கலவரத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதன்மூலம் பெரும்பான்மைச் சமுதாயத்தினரின் வாக்குகளை பா.ஜ.க. பக்கம் திருப்பித்தான் மோடி தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். சிறுபான்மையினருக்கு எதிராக செயல்பட்டதால் மோடிதான் பிரதமராக வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் முடிவு செய்து அவரை பிரதமராக்கியுள்ளது.

ஆனால், ‘ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை, விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன்’ என மோடி கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. 2019ஆம் ஆண்டு புல்வாமா தாக்குதலை வைத்து வெற்றி பெற்றார். இதுவெல்லாம் வட மாநிலங்களில் எடுபடுகிறது. தென்மாநில மக்கள் ‘எது சரி, எது தவறு’ என முடிவு செய்யும் அரசியல் தெளிவு பெற்றவர்கள். ஆனால், 2024 மக்களவைத் தேர்தலில் 26 கட்சிகளை ஒருங்கிணைத்து பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைப்பதை காங்கிரஸ் தடுத்துள்ளது.



பா.ஜ.க.வை வீழ்த்துவதில் எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை. அதற்கான முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. அதற்கு எதிர்காலத்தில் வெற்றி கிடைக்கும்.

தமிழ்நாட்டில் விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க. போன்ற கட்சிகள் மாநில அளவிலான சிந்தனை கொண்டவை. ஆனால், மாநிலங்களின் உணர்வுகளுக்குக் குரல் கொடுக்கும், தேசியச் சிந்தனை கொண்ட கட்சியாக காங்கிரஸ் உள்ளது. ‘பா.ஜ.க.வை வீழ்த்தி, ராகுல் காந்தி அவர்களை பிரதமராக்க வேண்டும்’ என்பதே காங்கிரசின் நோக்கம். ‘தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளரக் கூடாது, தேசிய அரசியலில் பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டும், வகுப்புவாத அரசியலுக்கு இடம் கொடுக்கக் கூடாது’ என்பது காங்கிரஸின் முதன்மை நோக்கம்.

அந்த வகையில், தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் உள்ளது. இந்தியா கூட்டணியில் முக்கியத் தூணாக தி.மு.க.வும், அதன் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இருக்கிறார். பா.ஜ.க. எதிர்ப்பில் அவர் முன்னிலையில் இருக்கிறார். தமிழ்நாட்டில் மக்கள் நலன் சார்ந்த ஆட்சியை தி.மு.க. நடத்தி வருகிறது. எனவே, இந்தியா கூட்டணி வலுப்பட வேண்டும்.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி பலவீனப்பட்டால் அது வகுப்புவாத அரசியல் வளர வழிவகுத்து விடும். மக்கள் பிரச்சினைகளில் சில விமர்சனங்களை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை முன் வைத்துள்ளார். மக்களைப் பாதிக்கும் வகையில் தி.மு.க. அரசு முடிவெடுத்தால் முதலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுச் செல்வோம். அதன்பிறகு, மக்கள் மன்றத்திலும் குரல் கொடுப்போம்.

சாதிவாரிக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசுதான் நடத்த வேண்டும். மாநில அரசுகள் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தலாம். ஆனால், நாடு முழுவதும் ஒன்றிய அரசே சாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்திவிட்டால், தேசிய அளவில் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியும். அதனால்தான், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசே சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என கூறியுள்ளார்.

தி.மு.க.வை விமர்சிக்கும் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யின் நிலைப்பாட்டை இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரஸ் ஆதரிக்காது. பா.ஜ.க. எதிர்ப்பை விஜய் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. வகுப்புவாத எதிர்ப்பை முதன்மை நோக்கமாகக் கொண்டது இந்தியா கூட்டணி. தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி 2004ல் இருந்து தொடரும் கொள்கைக் கூட்டணி. எனவே, இந்தக் கூட்டணியை பலவீனப்படுத்தும் வகையில் விஜய் பேசுவதை ஏற்க முடியாது. 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றிபெறும்.

கடந்த 2024 மக்களவைத் தேர்தல் பிரசாரத்திற்கு கோவை வந்த ராகுல் காந்தி, இனிப்பு வாங்கி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொடுத்து, கட்டியணைத்து ‘எனது சகோதரர்’ என அன்பை வெளிப்படுத்தினார். தலைவர் ராகுல் காந்திக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் இடையே உள்ள கூட்டணி, மிக மிக இணக்கமான கொள்கைசார்ந்த, நீண்டகாலம் நீடிக்கும் கூட்டணி. “மு.க.ஸ்டாலினுடன் சைக்கிள் பயணம் மேற்கொள்ளத் தயார்” என தலைவர் ராகுல் காந்தி அவர்கள் அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி நல்ல புரிதலோடு உள்ளது. வெறும் இடங்கள் சார்ந்தது அல்ல. உணர்ச்சிப்பூர்வமான, கொள்கைக் கூட்டணி. எனவே, எங்கள் கூட்டணி மேலும் வலிமை அடையவே வாய்ப்புகள் அதிகம்.

தமிழக வெற்றிக் கழகத்தின் வருகையால் எங்கள் கூட்டணிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

இவ்வாறு ஆ.கோபண்ணா தெரிவித்தார்.



சென்னை சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கத்தில் 11.11.2024 அன்று ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் பழங்குடியினர் நல வாரிய ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலுவல் சாரா உறுப்பினர் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி, அலுவலர் சார்ந்த உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, முதன்மைப் தலைமை வனப்பாதுகாவலர் யோகேஷ் சிங், பழங்குடியினர் நல இயக்குநர்/உறுப்பினர் செயலாளர் ச.அண்ணாதுரை, பழங்குடியினர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.